வேலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள்
ஆணையிடுபவர்: திரு.ப.தாட்சாயணி,பி.எஸ்சி.,

ந.க.அ3/3814/2019

நாள்:01.08.2019.

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சு பணித்தொகுதி வேலூர் மாவட்ட வருவாய் அலகு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு – IV ன் மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-III) தெரிவு செய்யப்பட்டு வேலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்து பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்க: 1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித எண் 1506/PSD-B/2019, நாள்: 21.02.2019.
2. வேலூர் மாவட்ட ஆட்சியரின் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/3814/2019, நாள்:05.03.2019.

*******

ஆணை:

வேலூர் மாவட்ட வருவாய் அலகில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி - IV தேர்வில் தேர்ச்சி பெற்று, வேலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுருக்கெழுத்து தட்டச்சர்களாக பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட சுருக்கெழுத்து தட்டச்சர்கள் அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் பணியாற்றி வருகின்றனர்.

2) எனவே கீழே குறிப்பிடப்பட்டுள்ள 02 சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்குகெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் இவர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-III) பணியமைப்பில் வரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவம் துவக்கியும், இவர்களது தகுதிகாண் பருவம் 3 (மூன்று) ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | சுருக்கெழுத்து தட்டச்சர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-III) பணியமைப்பில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|
| 1. | V.மாலதி,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். | 08.03.2019 பிற்பகல் |
| 2. | T.ஜெகதீஸ்குமார்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். | 06.03.2019 முற்பகல் |

3) இந்த பணிவரன்முறையானது 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தொகுதி -4ல் அடங்கிய பணிக்கான தேர்வுகளில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிப்பேராணை மனுக்களின் மீது பிறப்பிக்கப்படும் தீர்ப்புரைகளுக்கு உட்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

4) இந்த ஆணைகள் குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ள வேண்டியது.

ஒம்/-ப.தாட்சாயணி,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது)
வேலூர் - 9.

/ஆணைப்படி/

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்

சம்பந்தப்பட்ட நபர்கள்
நகல்: மாவட்ட ஆட்சியர் அலுவலக கணக்கு பிரிவு, வேலூர்.
நகல்: அ3 இருக்கைக்கு.